**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.69/2018

பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி மலையப்பன் கண்ணன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மலையப்பன் | வயது | : | 60/24 |
| தகப்பனார் பெயர் | : | பொன்னையா | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | லெம்பலக்குடி | தொழில் | : | விவசாயம் |

நாள்-06.01.2024

பி.வா.சா.2

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான், பிரதிவாதி, பாண்டியராஜ் ஆகியோர்கள் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. வழக்கு விபரங்களை சோமையாதான் என்னிடம் சொன்னார்.

3. பி.வா.சா.ஆ.1 எழுதப்பட்டதாக சொல்லும் நாள் 03.09.2018 ஆகும். அதை எழுதி சுமார் 5, 6 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

4. எனக்கு இரண்டு மகன்கள். எனது முதல் மகனுக்கு திருமணம் நடந்த திருமண பத்திரிக்கை என்னிடம் உள்ளது. எனது முதல் மகனுக்கு திருமணம் நடந்த தேதி 10.05.2019. அந்த திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்ய இயலும்.

5. எனது சின்ன மகனுக்கு திருமணமாகவில்லை. என் உடன் பிறந்த சகோதரிகளின் பிறந்த தேதி தெரியுமா என்றால் பார்த்துதான் சொல்ல வேண்டும்.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 03.09.2018ம் தேதி எழுதும்போது பார்த்தேன். அதன் பிறகு நான் பார்க்கவில்லை.

7. நான் சொல்லும் 03.09.2018ம் தேதி எந்த ஆவணமும் ஏற்படவில்லை என்றாலும், நான், பாண்டியராசு, பிரதிவாதி ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து வாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு ஆவணம் தயார்செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு தற்போது ஏற்பட்டதால்தான், அதில் உள்ள விபரங்களை என்னால் சொல்ல முடிகிறது என்று சொன்னால் சரியல்ல.

9. பொதுவாக 5, 6 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசயங்களை நினைவில் வைத்து முழுமையாக சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல.

10. பி.வா.சா.ஆ.1 ஆவணம் 03.09.2018ல் ஏற்பட்டிருந்தால் அதற்கு பின்பு காவல் கண்காணிப்பாளர் புகார் மற்றும் மாவட்ட குற்றப்பிரிவு வாக்குமூலங்களில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றாலும், அந்த அப்போது இல்லாத காரணத்தினால்தான் மேற்படி ஆவணத்தை அவர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் எனக்கு தெரியாது.

11. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியதாக கூறும் நாளன்று நான் காலை 10.30 மணிக்கு கடைக்கு சென்றுவிட்டேன். அவர்கள் 10.45க்கு சென்றுவிட்டு அரை மணி நேரத்தில் திரும்பி வந்துவிட்டார்கள்.

12. நான் சொல்லும் காலக்கட்டத்திற்குள் பத்திரம் வாங்கிக்கொண்டு வந்து அந்த ஆவணத்தை தயார் செய்திருக்க முடியாது என்றால் சரியல்ல.

13. வாதிக்கு எத்தனை குழந்தைகள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

14. பிரதிவாதி சோமையாவிற்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது.

15. பிரதிவாதியும் நானும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்றாலும், பிரதிவாதி சோமையாவிற்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. பொதுவாக தெரியாத நபர்களுக்கு சாட்சி கையெழுத்து யாரும் போடமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. கடையில் வைத்து கையெழுத்து போட்டதால்தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார்கள்.

17. எனக்கு நீதிமன்றத்தலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. பிரதிவாதிதான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார்.

18. நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பது சட்டப்படி குற்றம் என்று எனக்கு தெரியும்.

19. வாதி, பிரதிவாதி எந்த பேனாவை வைத்து கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது.

20. நான் சொன்ன தேதியில், நேரத்தில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மு.மா.நீ,



21. நான் பிரதிவாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பி.வாசா.ஆ.1 ஆவணத்தை அவருடன் சேர்ந்து உற்பத்தி செய்துவிட்டு, அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

22. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாணபத்திரிக்கையில் கண்டுள்ள விபரங்கள் அனைத்தும் பிரதிவாதி சொன்னதன் பேரில் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.